# வள்ளலார் மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற பெருமான்!

(மு. முத்துஜோதி)

(புதுடெல்லியில் வெளிவந்த 'வடக்கு வாசல்' என்னும் மாதசஞ்சிகையில், வள்ளலார் சித்திபெற்ற நாளை 'நினைவு நாள்' என்று குறிக்கப்பட்டிருந்தது, மனம் நொந்து அவ்வாறு குறிக்கக் கூடாது என அவர்களுக்கு எழுதி விடுத்தக் கட்டுரை இது)

- அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றாள் ஔவை. மனிதன் அல்லாத மற்ற உயிர்கள் பிறக்கின்றன, உண்கின்றன, மலம் கழிக்கின்றன, இன உற்பத்தி செய்கின்றன, பின்பு இறக்கின்றன. இந்த ஐந்து தொழிலை மாத்திரம் மனிதப் பிறப்பும் செய்யுமாகில், 'மானிடராய் பிறத்தல் அரிது' என்ற முதுரை தேவையற்றதாகிவிடும். இந்த ஐந்தையும் தாண்டி, மனதால் சிந்தித்து அறிவால் அறிந்து இறை உணர்வு பெறுதலே இப்பிறப்பை 'அரிதான – மேன்மையான'ப் பிறப்பாக செய்ய இயலும். அதனால்தான் "இந்த தேகம் ஞானம் பெறுவதற்கே எடுத்த தேகம்" என்பார் வள்ளலார்.

- இந்த மண்ணில் அவதரித்த பல அருளாளர்கள் இந்த ஞானத்தை முழுமையாகப் பெற்றார்கள். வாழ்நாள் முழுவதும் இறைஉணர்வோடு இருந்து இத்தேகத்தை இவ்உலகில் விடுத்து இறையடிச் சார்ந்தார் பலர். அவர்கள் அடைந்ததை முக்தி என்கிறோம். இன்னும் சில அருளாளர்கள், இறை உணர்வோடு வாழ்ந்து இறைநிலை அடைந்து தன் உடலோடு இறை அனுபவம் பெற்றார்கள். அதை சித்தி என்கிறோம். சுந்தரர், அப்பர், மாணிக்க வாசகர், ஆண்டாள் போன்றோர் அந்நிலையை அடைந்ததாக வரலாறு கூறுகிறது. இவர்களுக்கு என்று எங்கும் சமாதி இல்லை.

- இந்த வகைச் சித்தியை அடைந்தவர்களில் வடலூர் இராமலிங்க அடிகள் என வழங்கும் வள்ளலார் அவர்கள் நம் அண்மை காலத்தில் வாழ்ந்தவர்கள். 1823 ஆம் ஆண்டு சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்து 1874 ஆம் ஆண்டு வடலூரை அடுத்த மேட்டுக்குப்பத்தில் தன் உடலோடு மறைந்து சித்திபெற்றார்கள். அதனால்தான் இன்றும் அந்த அறை சித்திவளாகத் திருமாளிகை என்று வழங்கப்படுகிறது. இன்றும் ஆண்டிற்கு ஒருமுறை அந்த அறையை பொதுமக்கள் தரிசனத்திற்காக தைப்பூசத்தின் மூன்றாவது நாள் திறந்து காட்டப்படுகிறது. வள்ளற்பெருமான் அந்த திரு அறைக்குள் 1874ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று இரவு உள்ளே சென்று அன்பர்களை வெளியே பூட்டிக்கொள்ளப் பணித்தார்கள். அரசாங்கத்தார் வந்து திறப்பிக்கச் சொன்னால் மாத்திரம் திறந்து காட்டச்சொன்னார்கள். தன்னை இறைவன் காட்டிக்கொடார் என்றும் வெற்று வீடாகவே காட்டுவார் என்றும் கூறினார்கள். அவ்வாறே அறை வெளியேப் பூட்டப்பட்டது. அவர் வணங்கி வழிபட்ட திருவிளக்கை வெளியே பெருமான் வைத்தார்கள். அரைபூட்டப்பட்ட பின்னால், அவரது சீடர்களும் மேட்டுக்குப்ப கிராமமக்களும் திரளாக அமர்ந்து திருவிளக்கினை ஆராதித்து கண்ணீர்மல்க இருந்தார்கள். அப்போது வெள்ளையர்கள் ஆட்சிக்காலம்.

- வெள்ளையரான தென்னாற்காடு கலெக்டர், தாசில்தார் ஆகியோர் வந்து கதவை திறக்கப் பணித்தார்கள். கதவுப் பூட்டினைத் திறந்து பார்க்க, அறை வெற்று அரையாக இருக்க, வெள்ளையன் அஞ்சினான். முன்பே பலமுறை வள்ளலாரிடம் பயம் மற்றும் பக்தி கொண்டிருந்த அந்த துரை, பின்னால் பலவடி எடுத்து வைத்து புறங்காட்டாது சென்றதாக வரலாறு. அதோடு அல்லாமல் "The Ramalinga Paradesi of vadalur has disappeared from human vision" என்று St. George கெசட்டில் வெளியிட்டது வெள்ளையர் அரசாங்கம். தான் பெற்ற அந்த சாவா வரத்தைப் பற்றிப் பலநூறு பாக்களில் அருட்பாவில் வள்ளலார் அகச்சான்றுகளாக அருளி உள்ளார்கள். அவை முழுவதையும் குறிப்பதெனில் பெருகும். பெருமான் அதை முத்தேக சித்தி என்பார்கள்.

**மூன்று தேகங்களாவன:**

1. சுத்த தேகம், 2. பிரணவ தேகம், 3. ஞான தேகம் என்பன.

1. கண்களுக்குப் புலப்பட்டு, கைகளுக்கு அகப்படுவது **சுத்த தேகம்**. இதன் வெளிக்காட்சியாக தேகம் பொன் வண்ணமாக மாறுவதாகவும் கற்பூர மணம் வீசுவதாகவும் குறிக்கின்றார்கள். தொடக்க காலத்தில் பெருமானிடம் இந்த இரண்டு மாற்றங்களையும் காண பல ஊர்களிகளிலிருந்து மக்கள் வண்டிக்கட்டிக்கொண்டுச் சாரைசாரையாக சென்றதாக பல ஊர்ப் பெரியவர்கள் இன்றளவும் கூறக் கேட்கலாம்.

2. இரண்டாவது **பிரணவ தேகம்** - இது புலனுக்கு (செவிக்கு)ப் புலப்படும் கைகளுக்கு அகப்படாது – ஒலிபோல.

3. மூன்றாவது – கண்களுக்கும் புலப்படாது, கைகளுக்கும் அகப்படாது. இதை **ஞான தேகம்** என்பார் - ஆகாயம் போல.

இதை ஒரு அறிவியல் போல – அறிவியல் வேதிவினை மாற்றம் போல -படிப்படியாக அடைதல் பற்றி விரிவாக அருட்பாவில் வள்ளலார் பாடலிலும் உரைநடையிலும் அருளுகிறார்.

இந்த மரணமிலாப் பெருவாழ்வை அடைய, தலையாய தேவை உயிர்க்கருணை தான் என்பார் பெருமான்.

"எங்கே கருணை இயற்கையில் உள்ளன

அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே" (அகவல்)

என்பது அவர்காட்டும் இறை மார்க்கம்.

இந்த உயிர்க்கருணைதான் அவரை ஏறாநிலமிசை ஏற்றிவிட்டதாக, அதாவது மரணமிலாப் பெருவாழ்வை பெற்றுத் தந்ததாக அவர் இறுதியாக அருளிய பேருபதேசத்தில் தெரிவிக்கின்றார்.

முன்பு குறிப்பிட்டது போன்று அவர் பெற்ற சாவா நிலையை பலநூறு பாடல்களில் குறிப்பிட்டிருக்கிற நிலையில், அகச்சான்றாக ஒரே ஒரு பாடலைக் கீழே தருகிறோம்.

மனித உயிர்க்கு மரணம்தான் எத்தனை முறையில் வருகிறது! காற்று, நெருப்பு, மண், நீர், வெளி என்ற ஐந்தாலும், கதிர்வீச்சுகளினாலும், எமனாலும், பிணியாலும், கொலைக் கருவிகளினாலும், கோள்களினாலும், பிறர் செய்யும் கொடுஞ் செயல்களாலும் மேலே குறிப்பிட்டவை அல்லாத பிற வகையாலும் மரணம் வருகிறது. இவை எதாலும் தன் உடலுக்கு மரணம் வராது – அழியாத மெய் அளிக்க வேண்டும் என்று இறைவனை வள்ளலார் வேண்டினாராம். இறைவன் ஒரு கணமும் தாமதியாது விரைந்து அளித்தான் என்பார் வள்ளலார். அப்பாடல் இதோ:

“ காற்றாலே புவியாலே ககனம் அதனாலே

கனலாலே புனலாலே கதிராதி யாலே

கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே

கோளாலே பிறர்இயற்றும் கொடுஞ்செயல்க ளாலே

வேற்றாலே எஞ்ஞான்றும் **அழியாதே விளங்கும்**

**மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே!**

ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்

எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.!

இதுபோன்ற பலநூறு பாக்களில் தான்பெற்ற நெடும்பேற்றை எடுத்துரைத்து, மற்றவரும் இதை பெறுதல் கூடும், பெறுதல் வேண்டும் உலகோரே வாருங்கள் என அழைக்கின்றார்.

எனவே, பெருமான் பெற்றது மரணமில்லாதப் பெருவாழ்வு. இன்றும் நம்மோடு ஞான தேகத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார். எனவே அவர் மறைந்ததை மரணம் என்று குறியாமல் சித்தி என்று வழங்குதல் வேண்டும் என்றும் சித்திப்பெற்றாற்கு நினைவுநாள் இல்லை என்றும் புரிதல் வேண்டும்.